**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 134/2019 |
| Name | : Sivaprabhu |
| P.W. | : 7 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.10.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.09.2014ம் தேதி மதியம் 01.30 மணிக்கு 70 வயது மதிக்கத்தக்க பெரிய தண்டபாணி என்பவரது உடலை உடற்கூறாய்வு செய்ய மடத்துக்குளம் காவல் ஆய்வாளர் குற்ற எண். 211/2014 வழக்கில் கொடுத்த வேண்டுகோளின் படி பிரேத பரிசோதனை செய்தேன். அவருக்கு பின்வறுமாறு காயங்கள் காணப்பட்டது.

1. சிதைந்த காயம் 40*20 செ.மீ இடது தொடையில் காணப்பட்டது உறுப்புகள் வெளியே தெரிந்தது

2. இடது கையில் சிதைந்த காயம் காணப்பட்டது எலும்புகள் வெளியே தெரிந்தது

3. இடது பக்க நெஞ்சு பகுதியில் 30*20 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம்

4. அடிவயிற்றில் உள் உறுப்புகள் அனைத்தும் வெளியே தெரியும் அளவுக்கு சிதைந்த

காயம்

5. இரண்டு பக்கம் உள்ள இடுப்பு எலும்பு உடைந்திருந்தது

6. நெஞ்சு பகுதியில் விலா எலும்புகள் இரண்டு பக்கமும் உடைந்திருந்தது

7. நெஞ்சு மற்றும் வயிற்று பகுதியில் உள் உறுப்புகள் அனைத்திலும் சிதைந்த காயம் காணப்பட்டது

அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் ரத்தப் போக்கினால் மரணம் ஏற்பட்டதாக சான்று அளித்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.10.24 15:03:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்